புதுச்சேரி அரசு
பள்ளிக் கல்வி இயக்கம்

நாள் : 26-10-2017

## செய்திக் குறிப்பு

தமிழ்நாடு, திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி நகரில் அமைந்துள்ள சைனிக் பள்ளியில் 2018 - 2019 கல்வி ஆண்டில், ஆறு மற்றும் ஒன்பதாம் வகுப்பில் மாணவர்களைச் (ஆண்கள் மட்டும்) சேர்ப்பதற்கான அகில இந்திய நுழைவுத் தேர்வு 07-01-2018 அன்று புதுச்சேரியில் உள்ள வள்ளலார் அரசு பெண்கள் மேனிலைப் பள்ளி, இலாசுப்பேட்டையில் நடைபெறும். இதற்கான விண்ணப்பம் கீழ்கண்ட முகவரியில் நவம்பர் மாதம் 30 ஆம் தேதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**ஆறாம் வகுப்பிற்கு விண்ணப்பிக்க தகுதி:**

01-07-2018 அன்று 10 வயது முடிந்தும் 11 வயது முடியாமலும் அதாவது ஜூலை 02, 2007–லிருந்து ஜூலை 01, 2008–க்குள் பிறந்த மாணவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

**ஒன்பதாம் வகுப்பிற்கு விண்ணப்பிக்க தகுதி:**

01-07-2018 அன்று 13 வயது முடிந்தும் 14 வயது முடியாமலும் அதாவது ஜூலை 02, 2004–லிருந்து ஜூலை 01, 2005–க்குள் பிறந்து, அரசு அங்கீகாரம் பெற்றுள்ள பள்ளியில் 8 - ஆம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவமும் விளக்க குறிப்பேடும் பெற விரும்பும் பொதுப் பிரிவினர் மற்றும் படைத்துறைப்பிரிவினர் ரூபாய் 400/- க்கும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தவர் ரூபாய் 250/- க்கும் அமராவதி நகர், பாரத ஸ்டேட் வங்கியில் (கிளை எண்- 2191) மாற்றத் தக்க வகையில் முதல்வர், சைனிக் பள்ளி, அமராவதி நகர், என்ற பெயரில் வரைவோலை (DD) எடுத்து, வேண்டுதல் கடிதத்துடன் எந்த வகுப்பிற்கு (VI / IX) அனுமதிக்கப் பட வேண்டும் என்பதையும், எந்தப் பிரிவைச் சேர்ந்தவர் (தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், படைத்துறையினர், பொதுப்பிரிவினர்) என்பதையும் குறிப்பிட வேண்டும். ஆறாம் வகுப்பில் சேர விரும்புவோர் நுழைவுத் தேர்வு எழுத விரும்பும் மொழியையும் (ஆங்கிலம், தமிழ், இந்தி, மற்றும் இதர மாநில மொழிகள்) குறிப்பிட்டு கீழ்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும். ஒன்பதாம் வகுப்பில் சேர விரும்புவோர் நுழைவுத்தேர்வை ஆங்கிலத்தில் மட்டுமே எழுத இயலும்.

**முதல்வர்,**
**சைனிக் பள்ளி,**
**அமராவதி நகர், 642 102**
**உடுமலைப் பேட்டை வட்டம்,**
**திருப்பூர் மாவட்டம், தமிழ்நாடு.**

விண்ணப்பப் படிவங்களை www.sainikschoolamaravathinagar.edu.in என்ற இணையதள முகவரியிலும் பதிவிறக்கம் செய்து பதிவுக் கட்டணத்தை படிவத்தோடு சேர்த்துக்கட்ட இயலும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சைனிக் பள்ளிக்கு 05-12-2017 - க்குள் சென்று சேர வேண்டும். தேர்வு செய்யப்படும் மாணவர்களுக்கு புதுச்சேரி அரசு கல்வி உதவித்தொகை வழங்கும்.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய சைனிக் பள்ளியின் தொலைபேசி எண்கள்: 04252 – 256246, 04252 – 256296 மற்றும் கைப்பேசி எண்: 917840014449

(ல.குமார்)
**பள்ளிக் கல்வி இயக்குநர்**

இந்த செய்திக் குறிப்பினை தங்கள் நாளேட்டில்/வானொலியில்/ தொலைக்காட்சியில் வெளியிட/ஒளிபரப்ப அன்புடன் வேண்டுகிறேன்.

(ல.குமார்)